## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | O.S.No. 50 of 2013 | **DW-1** | : | Cross |
| **Name** | மாதவன் | **Father Name** | : | வரதப்பன் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 26.02.2026 administered by District Munsif, Uthangarai.

**துவக்க நேரம் - 12.50 PM**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் B.Com படித்துள்ளேன். நான் 4 முதல் 8 பிரதிவாதிகளுக்காக சாட்சியமளிக்கிறேன். 3-ம் பிரதிவாதியின் வாரிசுகள் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். மூன்றாம் பிரதிவாதியின் தகப்பனார் படமூத்தி என்கிற ராமசாமி என்பதை நான் மறுக்கவில்லை என்று சொன்னால் சரிதான் ஏற்றுக்கொள்கிறேன். அந்த படமூத்தி என்கிற ராமசாமிக்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவருக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 சான்றாவனத்தில் உள்ள கைரேகை மேற்படி படமுத்தி என்கிற ராமசாமியின் கைரேகை தான் என்றால் கைரேகை குறித்து என்னால் யாருடையது என்று கூற முடியாது கையெழுத்தாக இருந்தால் கூற முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 3 சான்றாவனத்தில் உள்ள கைரேகை யாருடையது என்றால் அது குறித்தும் என்னால் யாருடையது என்று கூற முடியாது. ஆனால் அதில் அண்ணாமலை என்ற கையொப்பம் 3-ம் பிரதிவாதி உடையது தான் அவருடைய கையொப்பம் எனக்கு தெரியும்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.9 சான்றாவனத்தில் உள்ள கைரேகை யாருடையது என்றால் பழனி என்கிற பெண்மனி எங்களுக்கு விற்பனை செய்த போது அவர் செய்த கைரேகை ஆகும். வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும் தனது அண்ணன் தம்பி மற்றும் அப்பாவிடம் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளார். எதன் அடிப்படையில் அவர் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு ஆவணங்களை படித்து

பார்த்ததில் அவர் பெயரில் உயில் உள்ளதாக கூறி அதன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளார்.

4. வா.சா.ஆ.1 உயில் சாசனத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம் நான் வழக்கு கோப்பை பார்த்து தெரிந்து கொண்டேன். அந்த உயிலில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் படமுத்தி என்கிற ராமசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் தான் என்றால் அது தவறு அவர் விற்பனை செய்த சொத்துக்களையும் சேர்த்து உயில் எழுதியுள்ளார். அந்த சொத்துக்கள் அதற்கு முன்பு அவருக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். உயிலில் கண்டுள்ள சொத்துக்களை உயில் எழுதுவதற்கு முன்பாக விற்பனை செய்தாரா அல்லது உயில் எழுதிய பின்பு விற்பனை செய்தாரா என்றால் ஒரு சில சொத்துக்களை உயில் எழுதுவதற்கு முன்பாகவும் ஒரு சில சொத்துக்களை உயில் எழுதிய பின்பு அவர் இறப்பதற்கு முன்பாகவும் விற்பனை செய்துள்ளார்.

5. என்னுடைய பதில் உரையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் மேற்கூறியவாறு எந்தெந்த சொத்துக்களை அவர் உயில் எழுதுவதற்கு முன்பு விற்பனை செய்தார் எந்த சொத்துக்களை உயில் எழுதிய பின்பு விற்பனை செய்தார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய பதில் உரையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சர்வே எண் 21/2 4 சென்ட் நிலத்தை அனுபவத்தின் அடிப்படையில் பாத்தியம் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் அனுபவம் மூலமும் கிரைய ஆவணம் மூலமும் பாத்தியம் என்று கூறியுள்ளேன். அந்த 4 சென்டு நிலம் எந்த கிரைய ஆவணத்தின் படி பாத்தியம் என்று நான் எந்த இடத்தில் கூறியுள்ளேன் என்றால் 7-வது பத்தியில் ஆவணை எண். 2172 /1999 என்ற ஆவணத்தின் படி பாத்தியம் என்று கூறியுள்ளேன்.

6. 7.2.1995 தேதியிலேயே மேற்கண்ட 4 சென்ட் நிலத்தை விற்பனை செய்து சுவாதீனம் ஒப்படைத்து விட்டார் என்று கூறியுள்ளேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த தேதியில் ஒப்பந்தம் செய்யப்பட்டு சுவாதீனம் வழங்கப்பட்டது கிரையம் செய்யும் சமயத்தில் ஒப்பந்தத்தை உரிமையாளர் திரும்ப பெற்றுக் கொண்டார். அந்த சங்கதியை எனது பதில் உரையிலோ வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் அது கூற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை அதனால் கூறவில்லை. சர்வே எண் 21/ 2 என்பது மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 2 ஏக்கர் 35 சென்ட் நிலம். அதில் நாங்கள் நேரடியாக படமுத்தி என்கிற ராமசாமி

என்பவரிடமிருந்து கிரயம் வாங்கிய நிலம் எவ்வளவு என்றால் 1991 ஆம் ஆண்டு எனது தந்தை வரதப்பன் பெயரில் 40 செண்டு நிலம் வாங்கப்பட்டது, அதற்கடுத்து 1993 ஆம் ஆண்டு எனது தாயார் பெயரில் 80 சென்று நிலம் வாங்கப்பட்டது மீண்டும் அதே ஆண்டில் எனது தாயார் பெயரில் 36 சென்ட் நிலம் வாங்கப்பட்டது 4 செண்டு நிலம் ஒப்பந்தம் செய்து கொடுத்து எங்களுக்கு பாத்தியப்படுத்தியிருந்தார் அவர் இறந்துவிட்ட பின் அவரது மகன் எங்களுக்கு கிரயம் செய்து கொடுத்தார்.

7. எந்த தேதியில் படமுத்தி என்கிற ராமசாமி இறந்தார் என்றால் 1995 ஆம் ஆண்டு மே மாதத்தில் இறந்ததாக கூறினர் சரியான தேதி எனக்கு தெரியாது. அந்த நான்கு செண்ட் கிரைய ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்து கொடுத்தனர் என்றால் அண்ணாமலை அவரது மைனர் மகன்கள் சார்பாகவும் எழுதிக் கொடுத்தார். அந்த கிரைய ஆவணம் ஏற்படும் சமயத்தில் வாதிக்கு என்ன வயது என்றால் சுமார் 7 அல்லது 8 வயது இருக்கும். 1, 2 பிரதிவாதிகளுக்கு என்ன வயது என்றால் அவர்கள் வாதியை விட ஒன்று இரண்டு வயது கூட குறைய இருக்கலாம். அந்த கிரைய ஆவணத்தில் அவர்களுடைய வயது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை மைனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.மேற்படி நான்கு செண்ட் நிலம் கிணறா என்றால் இல்லை காலி நிலம். சர்வே எண் 21/2 இல் கிணறு உள்ளதா என்றால் இல்லை.

8. எங்கள் கிரைய ஆவணத்தில் ஒப்பந்தம் குறித்து கூறப்பட்டுள்ளது ஆனால் அதை திருப்பி கொடுத்துவிட்டதாக கூறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தின் போது ரூபாய் ஆயிரம் கொடுக்கப்பட்டதற்கு ஏதாவது ஆதாரம் கொடுத்துள்ளேனா என்றால் கிரைய ஒப்பந்த பத்திரம் தான் அதற்கு ஆதாரம். பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலும் மைனர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது அதில் வயது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதே போல் பி.வா.சா.ஆ.7 ஆவணத்திலும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

9. மேற்படி படமுத்தி, அண்ணாமலை மற்றும் மைனர்கள் அந்த சொத்தில் இருந்ததால்தான் அவர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.4 தேதியில் சர்வே எண் 21/2A என்பது 79 ஏர்ஸ் கொண்ட நிலம் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணம் சர்வே எண் 21/5-க்கானது என்று சொன்னால் சரியல்ல. அது சர்வே எண் 21/2-க்கானது சர்வே எண் 21/5 என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. கோவிந்தன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்

தவறான சர்வே எண் குறிப்பிட்டு கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளனரா என்றால் சர்வே எண் தவறு செக்குபந்தி சரியானது.

10. கோவிந்தன் மற்றும் கிருஷ்ணன் வாங்கிய நிலத்தை நான் அவர்களிடம் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கி உள்ளோம். 1996 ஆம் வருடம் வாங்கியுள்ளோம். அதில் அண்ணாமலை கையொப்பம் செய்துள்ளாரா என்றால் செய்துள்ளார். அந்த கிரைய ஆவணத்தில் அண்ணாமலை கையொப்பம் செய்துள்ளாரா என்றால் கிருஷ்ணன் மற்றும் கோவிந்தனுக்கு 34 சென்ட் நிலம் பாத்தியம் இருந்தது, மீதம் 2 சென்ட் நிலம் அண்ணாமலைக்கு பாத்தியம் இருந்தது நாங்கள் 36 செண்ட் நிலமாக கிரயம் பெற்றோம். அந்த சங்கதிகளை எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ பதில் உரையிலோ கூறியுள்ளேனா என்றால் அப்போது கூறவில்லை தற்போது கூறுகிறேன். அந்த கிரைய ஆவணத்தில் அண்ணாமலை மைனர்களுடன் சேர்ந்து கிரையம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அந்தக் கிரைய ஆவணத்தின் இரண்டாவது பக்கத்தில் எங்களுக்கு கிரையம் மூலமாகவும் வாய்மொழி பிழை திருத்தல் பத்திரம் மூலமாகவும் பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணத்தில் என்ன பிழையானது எது சரியானது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

11. கோவிந்தன் மற்றும் கிருஷ்ணன் பெயரில் உள்ள பி.வா.சா.ஆ. 3 கிரைய ஆவணத்தில் பிழை திருத்தம் செய்வதற்காக ஏதாவது பதிவு செய்யப்பட்ட பிழை திருத்தல் ஆவணம் எழுதப்பட்டதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தில் பதிவு செய்யாத பிழை திருத்தல் ஆவணம் எழுதப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கோவிந்தன் மற்றும் கிருஷ்ணன் கிரையம் வாங்கிய ஆவணத்தில் சர்வே எண் 21/5 என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதை தான் அவர்கள் கிரையம் வாங்கினார்கள் என்று சொன்னால் அது தவறு. சர்வே எண் 21/5 கிரையம் வாங்கிவிட்டு சர்வே எண் 21/2A-ல் எங்களுக்கு கிரையம் கொடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல செக்கு பந்தி சரியாக குறிப்பிட்டு கிரயம் கொடுத்தனர். பி.வா.சா.ஆ.9 ஆவணம் சரியான ஆவணம் அல்ல அது வாதியை கட்டுப்படுத்த கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 1 உயில் ஆவணத்தில் பி.வா.சா.ஆ.9 கிரைய ஆவனத்தில் கண்ட சர்வே எண் 21/2ஏ-ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவர் அனைத்து சொத்தையும் தான் குறிப்பிட்டுள்ளார். சர்வே எண் 21/2 என்பது 95 ஏர்ஸ் நிலம் சர்வே எண் 21/2ஏ என்பது 79 ஏர்ஸ் நிலம் மீதமுள்ள 16 ஏர்ஸ் என்ன ஆனது என்றால் அவர் 1986 ஆம் ஆண்டில் ராமன்

என்பவருக்கு விற்பனை செய்தார், அதை எனது தந்தை 1988-ல் கிரயம் பெற்றுள்ளார்.

12. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் அண்ணாமலையை கார்டியனாக காட்டவில்லை என்று சொன்னால் அதை படித்துப் பார்க்கும்போது அவ்வாறு தான் உள்ளது அண்ணாமலையின் மனைவியை கார்டியனாக நியமித்துள்ளார். 06.05.1996 தேதியில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் செல்லாது அது வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் இதுநாள் வரை வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் சுவாதீனத்தில்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. படமுத்தி என்பவர் கடந்த 26.5.1995 தேதியில் இறந்துவிட்டார். அவர் எழுதிய உயல் படி அவர் விற்பனை செய்தது போக மீதமுள்ள நிலம் தான் தாவா சொத்து என்று சொன்னால் சரியல்ல, அவர் உயிருடன் இருக்கும் போதே அனைத்து நிலத்தையும் விற்பனை செய்து விட்டார். தாவா சொத்துக்கள் பொருத்து எங்கள் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணங்கள் செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

13. மோசடியான ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டு வருவாய் துறையில் பெயர் மாற்றம் செய்துள்ளோம் அதுவும் செல்லாது என்று சொன்னால் தவறு நாங்கள் கிரையத்தின் படி அனுபவத்தில் உள்ளோம் அதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்துள்ளோம். சர்வே எண் 21/1-ல் உள்ள கிணற்றில் வாதிக்கு 4-ல் 1 பங்கு பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல தவறு.

**வாதி தரப்பு வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**முடிவு நேரம் – 01.50 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- XXXXX

District Munsif(FAC),
Uthangarai.